வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 15.04.2026 – திங்கட்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு 2 நாள் பயணமாக இன்று மஹாராஷ்டிர மாநிலம் சென்றுள்ளார்.

பீகாரின் முதலமைச்சராக திரு.சாம்ராட் சௌத்ரி இன்று பதவியேற்றுக்கொண்டார்.

'விக்சித் பாரத்' கனவை நனவாக்க, நாட்டு மக்கள் வளர்ச்சித் துறைகளில் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டுமென்று பிரதமர் திரு.நரேந்திர மோடி, வலியுறுத்தியுள்ளார்.

பாதுகாப்பான மற்றும் தடையற்ற கடல்வழிப் போக்குவரத்தை உறுதி செய்வதில் இந்தியா உறுதியாக உள்ளது என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

*முர்மு -1(06 )*

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு 2 நாள் பயணமாக இன்று மஹாராஷ்டிர மாநிலம் சென்றுள்ளார். கிராமப்புற மற்றும் நகர்ப்புற சுகாதார சேவைகளுக்கிடையிலான ஏற்றத்தாழ்வுகளை, தொழில்நுட்ப வளர்ச்சிகள் பயன்படுத்திக் கொண்டு, அனைவருக்கும் தரமான சுகாதார சேவையை வழங்க வேண்டும் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார். இது குறித்த கூடுதல் தகவல்கள் … (வாய்ஸ்)

*முர்மு -2(16 )*

நாக்பூரிலுள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தின் 2ஆவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, எய்ம்ஸ் போன்ற நிறுவனங்கள் தரமான சுகாதார சேவையை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கூறினார். தொடர்ந்து, அங்குள்ள 210 மாணவர்களுக்கு பட்டங்களும், தங்கப்பதக்கங்களும் வழங்கினார். பின்னர், நாக்பூரிலுள்ள தேசிய நேரடி வரிகள் அகாடெமியில் நடைபெற்ற இந்திய வருவாய் சேவை அதிகாரி பயிற்சி

பெறுபவர்களின், 78ஆவது தொகுதிக்கான பிரிவின், நிறைவு விழாவில் அவர் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சி, இந்திய வருவாய் சேவையின் 78ஆவது தொகுதியைச் சேர்ந்த 130 அதிகாரி, பயிற்சி பெறுபவர்களுக்கான 16 மாத கால, அறிமுக பயிற்சி திட்டத்தின் நிறைவை குறிப்பதாகும். இந்நிகழ்ச்சியில் நாக்பூர் எய்ம்ஸ் தலைவர் டாக்டர் அனந்த் பண்டாரே உரையாற்றுகையில், இளம் அறுவை சிகிச்சை நிபுணர்கள் நோயாளிகளிடம் கடைபிடிக்க வேண்டிய விவேகமான அணுகுமுறை குறித்து வலியுறுத்தினார். மேலும், மாணவர்கள் தொடர்ச்சியான கற்றலுக்கான திறனை வளர்த்துக்கொள்ளவும்,

*முர்மு -3(05 )*

இரக்க குணத்துடன் கூடிய அறநெறி விழுமியங்களை கடைபிடிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். இந்நிகழ்ச்சியில் மகாராஷ்டிரா ஆளுநர் திரு. Jishnu Dev Varma, முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்னாவிஸ், சுகாதாரத்துறை இணையமைச்சர் திரு. பிரதா ராவ் ஜாதவ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

*பீகார் - 1(14 )*

பீகாரின் புதிய முதலமைச்சராக திரு.சாம்ராட் சௌத்ரி இன்று பதவியேற்றுக்கொண்டார். அண்மையில் மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதை தொடர்ந்து, பீகார் முதலமைச்சர் பதவியிலிருந்த JDU தலைவர் திரு, நிதீஷ்குமார் ராஜிநாமா செய்ததை அடுத்து, திரு.சாம்ராட் சௌத்ரி முதலமைச்சராக பதவியேற்றுள்ளார். அம்மாநிலத்தில் முதலமைச்சர் பதவியை ஏற்கும் முதல் பிஜேபி தலைவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. பீகார் முதலமைச்சராக பதவியேற்ற திரு. சாம்ராட் சௌத்ரிக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். திரு. சௌத்ரியின் ஆற்றல், பொதுச்சேவைக்கான அர்ப்பணிப்பு மற்றும் அவரது அனுபவம் ஆகியவை மாநிலத்திற்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்று அவர் தமது சமூக ஊடகப்பதிவில் குறிப்பிட்டுள்ளார். மேலும், பீகாரின் துணை முதலமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்ட திரு. விஜய் குமார் சௌத்ரி மற்றும் திரு. பிஜேந்திர பிரசாத் யாதவ் ஆகியோருக்கும் பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

*பீகார் - 2(06 )*

மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் பீகார் முதலமைச்சராக இன்று பதவியேற்ற பிஜேபி தலைவர் திரு.சாம்ராட் சௌத்ரி, துணை முதலமைச்சர்களாகப் பதவியேற்ற திரு. விஜய் குமார் சௌத்ரி மற்றும் திரு. பிஜேந்திர பிரசாத் யாதவ் ஆகியோருக்கும் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பீகாருக்கான இந்த புதிய என்டிஏ குழு, ஆற்றல் மற்றும் அனுபவத்தின் சங்கமம் என்றும் அவர் கூறினார்.

*சத்தீஷ்கர் விபத்து (16 )*

சத்தீஷ்கரின் சிங்கந்தராய் பகுதியில் ஏற்பட்ட கொதிகலன் வெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13ஆக உயர்ந்துள்ளது. சக்தி மாவட்டம், சிங்கந்தராய் கிராமத்திலுள்ள வேதாந்தா நிறுவன மின்னுற்பத்தி நிலையத்தில் நேற்று கொதிகலன் குழாய் வெடித்ததில் இந்த விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி இரங்கல் தெரிவித்துள்ளார். மேலும், உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பத்தினருக்கும், பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து 2 லட்ச ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு 50ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய, தாம் இறைவனை வேண்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அம்மாநில முதலமைச்சர் திரு.விஷ்ணு தியோ சாய் இந்த விபத்து குறித்து இரங்கல் தெரிவித்ததோடு உயிரிழந்த ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் தலா 5 லட்ச ரூபாயும் காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் இழப்பீடாக வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார். இந்த விபத்துக் குறித்து விசாரணை நடத்துமாறு பிலாஸ்பூர் கோட்ட ஆணையருக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

*மோடி- 1(04 )*

கர்நாடக மாநிலத்திற்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு.நரேந்திர மோடி, 'விக்சித் பாரத்' கனவை நனவாக்க, நாட்டு மக்கள் ஒன்பது வளர்ச்சித் துறைகளில் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார். இது குறித்து கூடுதல் தகவல்கள்....

*மோடி- 2 (16 )*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, கர்நாடக மாநிலம், மண்டியா அருகே உள்ள ஆதிச்சுஞ்சனகிரி மடத்தில், இன்று நடைபெற்ற 'குரு பைரவைக்கிய மந்திர்' திறப்பு விழாவில் பேசினார். சமூகத்திற்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த ஞானிகளும் துறவிகளும், சமூகத்தின் மீது தொலைநோக்குப் பார்வையை கொண்டிருந்ததாக பிரதமர் குறிப்பிட்டார். நாட்டு மக்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்ட பிரதமர், நீர் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை, தாயின் பெயரால் ஒரு மரம் நடும் திட்டம், சுற்றுப்புறம், வழிபாட்டுத் தலங்கள், கிராமங்கள் மற்றும் நகரங்களைச் சுத்தமாக வைத்திருத்தல் உள்ளிட்ட 9 துறைகளையும் அவர் சுட்டிக்காட்டினார். உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதன் மூலம்

'சுதேசி இயக்கத்தை' வலுப்படுத்துமாறும் பிரதமர் மக்களுக்கு அழைப்பு விடுத்தார். இந்தியர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குச் சுற்றுலா செல்வதன் மூலம் உள்நாட்டுச் சுற்றுலாவை மேம்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார். ரசாயனங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளைத் தவிர்த்து, இயற்கை மற்றும் ஆர்கானிக் விவசாய முறைகளைப் பின்பற்றுவது குறித்தும் அவர் பேசினார்.

*மோடி- 3 (12 )*

உடல் பருமனைத் தவிர்க்கும் வகையில், சமையல் எண்ணெயின் பயன்பாட்டைக் குறைத்து, சிறுதானியங்களை உணவில் சேர்த்துக்கொள்ளும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை அவர் வலியுறுத்தினார். யோகா, விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி ஆகியவை நமது அன்றாட வாழ்வின் அங்கமாகத் திகழ வேண்டும் என்றும் அவர் கூறினார். பிரதமர் குறிப்பிட்ட ஒன்பதாவது முக்கியப் பணி, ஏழை மற்றும் பின்தங்கிய வகுப்பினரின் மீது கருணை காட்டும் "சேவை மனப்பான்மை" என்பதாகும். இந்த ஒன்பது பணிகளையும் நாம் முறையாகப் பின்பற்றினால், இந்தியா விரைவில் ஒரு வளர்ந்த நாடாக உருவெடுக்கும் என்று பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார். முன்னதாக, பிரதமர் சாலைப் பேரணியிலும் பங்கேற்றார். பின்னர், அங்குள்ள காலபைரவேஸ்வரர் ஆலயத்தில் பிரதமர் வழிபாடு செய்தார்.

*ஜெய்சங்கர் (11)*

உலகளாவிய எரிசக்தி தேவைகளுக்கு பாதுகாப்பான மற்றும் தடையற்ற கடல்வழிப் போக்குவரத்தை உறுதி செய்வதில் இந்தியா உறுதியாக உள்ளது என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். எரிசக்தி சந்தைகளில் ஏற்படும் விநியோகச் சங்கிலி இடையூறுகள் குறித்து விவாதிப்பதற்காக ஜப்பானால் கூட்டப்பட்ட Asia zero-emission community கூட்டத்தில் தாம் பங்கேற்றதாக அவர் தமது சமூக ஊடகப்பதிவில் குறிப்பிட்டுள்ளார். வர்த்தக கப்பல்கள் மீதான தாக்குதல்கள் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்று அடிக்கோடிட்டுக் காட்டிய டாக்டர் ஜெய்சங்கர், உலகளாவிய வளர்ச்சிக்கு எரிசக்தி சந்தைகள் தடையின்றி இயங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

*தேர்தல் தமிழகம் (14)*

தமிழகத்தில் வரும் 23ஆம் தேதி நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது. ஒரே கட்டமாக நடைபெறவுள்ள இந்த தேர்தலுக்கான பிரச்சாரத்தில், முன்னாள் பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை, சிங்கநல்லூரில் பிஜேபி வேட்பாளருக்கு வாக்கு சேகரித்தார். திமுகவும், காங்கிரசும் மக்களின் நலனுக்கு எதிராக இணைந்து செயல்படுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

முன்னாள் நிதியமைச்சர் திரு.ப. சிதம்பரம், அரசியலமைப்பை மீறி தொகுதி மறு வரையறைக்காக மட்டுமே நடத்தப்பட்ட நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத் தொடருக்கு பிஜேபியே காரணம் என்றும் சிறப்பு நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத் தொடருக்கு மகளிர் மசோதா மட்டுமே காரணம் அல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், ஒட்டப்பிடாரத்தில் திரு. உதயநிதி ஸ்டாலினும், ஆலங்குடியில் திரு. சீமானும், சென்னையில் திரு. விஜய்-யும் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டனர்.

*தேர்தல் மேற்கு வங்கம் (16)*

மேற்கு வங்கத்தில் வரும் 23ஆம் தேதி நடைபெறவுள்ள முதல்கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது. மூத்த பிஜேபி தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித்ஷா இன்று அம்மாநிலத்தில் பல்வேறு பொதுக்கூட்டங்களில் பங்கேற்று உரையாற்றினார். டார்ஜிலிங் நகரிலுள்ள லெபாங் மைதானத்தில் நடைபெற்ற பேரணியில் கலந்து கொண்ட அவர், தொடர்ந்து ஜல்பைகுரி மாவட்டத்தின், Rajganj-ன் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொண்டு தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

முன்னதாக, மூத்த காங்கிரஸ் தலைவர் திரு. ராகுல் காந்தி நேற்று Raiganj மற்றும் Malda ஆகிய பகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், மேற்கு வங்க மாநில இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதாக அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாத திரிணாமுல் காங்கிரசை குற்றம் சாட்டினார்.

திரிணாமுல் காங்கிரஸ் தலைவரும், மேற்கு வங்க முதலமைச்சருமான செல்வி மம்தா பானர்ஜி, நேற்று ஹௌரா, பச்சிம், மெதினிபூர் மாவட்டங்களிலும் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

*அமர்நாத் யாத்திரை (12)*

அமர்நாத் யாத்திரைக்கான முன்பதிவு இன்று தொடங்கியதை ஒட்டி, முன்பதிவு மையங்களில் ஏராளமான பக்தர்கள் திரண்டுள்ளனர். முன்பதிவு, ஆன்லைன் மற்றும் ஆஃப் லைன் ஆகிய முறைகளிலும் நடைபெறுகிறது. 57 நாட்கள் நடைபெறும் இந்த யாத்திரை, அனந்த்நாக்கிலுள்ள பாரம்பரியமான நுன்வான்-பஹல்காம் பாதை உள்ளிட்ட பாதைகளில் ஜூலை 3ஆம் தேதி தொடங்கி, ரக்ஷா பந்தன் நாளான ஆகஸ்ட் 28ஆம் தேதி நிறைவடைய உள்ளது. இந்த யாத்திரைக்கு பஞ்சாப் நேஷனல் வங்கி ஒருங்கிணைப்பு வங்கியாக செயல்படுகிறது. இந்தியா முழுவதும் 556 வங்கி கிளைகள் இந்தப் பதிவு பணியில் ஈடுபட்டுள்ளன. நாடு முழுவதும் பஞ்சாப் நேஷனல் வங்கியின்

310 கிளைகள், ஜம்மு-காஷ்மீர் வங்கியின் 90 கிளைகள், எஸ்-வங்கியின் 37 கிளைகள் மற்றும் SBI -யின் 99 கிளைகள் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

*ஐபிஎல் (04)*

ஐபிஎல் கிரிக்கெட் தொடரின் இன்றிரவு 7.30 மணிக்கு பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டியில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும், லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணியும் களம் காண்கின்றன.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு 2 நாள் பயணமாக இன்று மஹாராஷ்டிர மாநிலம் சென்றுள்ளார்.

பீகாரின் முதலமைச்சராக திரு.சாம்ராட் சௌத்ரி இன்று பதவியேற்றுக்கொண்டார்.

'விக்சித் பாரத்' கனவை நனவாக்க, நாட்டு மக்கள் வளர்ச்சித் துறைகளில் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டுமென்று பிரதமர் திரு.நரேந்திர மோடி, வலியுறுத்தியுள்ளார்.

பாதுகாப்பான மற்றும் தடையற்ற கடல்வழிப் போக்குவரத்தை உறுதி செய்வதில் இந்தியா உறுதியாக உள்ளது என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

*********